# மயிலாடுதுறை நகராட்சி

**2020–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ஆம் தேதி வியாழக்கிழமை**
**மாலை 3.30 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.**
**முன்னிலை:– திரு. சோ. புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை.,**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர்**
மயிலாடுதுறை நகராட்சி

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| **30.04.2020** | **1)** மயிலாடுதுறை நகராட்சி ஆணையரின் **2020–ம்** ஆண்டு மார்ச் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.755**<br>பதிவு செய்யப்பட்டது |
| **30.04.2020** | **2)** இந்நகராட்சியில் தபால் பிரிவில் உள்ளூர் மற்றும் வெளியூர் தபால்களை தபால்துறைமூலம் அனுப்ப வேண்டியதன் அவசியத்தை கருதியும் நகராட்சி நிர்வாக ஆணையர்சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் மற்றும் இதர அரசுத்துறைகளுக்கு அவசர அவசியம் கருதி தபால்கள் அனுப்ப வேண்டியுள்ளதால் 2020–2021–ம் ஆண்டிற்கு அஞ்சல் வில்லைகள் வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.40.000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதி செலவினத்தில் இருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.3222/2018/டி1 | **தீர்மான எண்.756**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 30.04.2020 | 3) இந்நகராட்சியில் 2020–2021 ஆம் நிதியாண்டிற்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான படிவம் மற்றும் பதிவேடுப் பொருட்கள் கீழ்கண்டுள்ளவாறு தேவைப்படுகிறது. | தீர்மான எண்.757 அனுமதிக்கப்பட்டது. |

| வ.எண் | பொருட்கள் | கூடுதலாக தேவைப்படும் பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | Payment book M.F.6 | 25 |
| 2. | Recipt book M.F.4 | 10 |
| 3. | Transfer of fund register | 2 |
| 4. | Revenue chitta M.F.14 | 5 |
| 5. | Cheque Register | 2 |
| 6. | Advance Recovable 5years register | 3 |
| 7. | Cash Book M.F.107 | 2 |
| 8. | Building Application Register | 3 |
| 9. | Building licience Register | 3 |
| 10. | Ruled Note (2 quear) | 10 |
| 11. | Medical certificate form (4A) | 10 (Books) |
| 12. | Tenter Register M.F.203 | 8 |
| 13. | Contractors Register | 6 |
| 14. | Rapper Sheet | 500 Nos |
| 15. | 4X6 Cover | 500 |
| 16. | Personal Register | 20 |
| 17. | PR Running note file | 15 |
| 18. | Attendance register | 15 |
| 19. | NT Register | 2 |
| 20. | M.D.R M.F.21 | 4 |
| 21. | M.L Register | 15 |
| 22. | 7 Days Notice | 10Books |
| 23. | 3 Days | 10Books |
| 24. | Japthi Notice | 10Books |
| 25. | Occupier Notice | 10Books |
| 26. | Water Connection Dc Notice | 10Books |
| 27. | UGD Connection Dc Notice | 10Books |
| 28. | Water Connection DC Final Notice | 10Books |
| 29. | 4X6 Cover | 500 nos |
| 30. | Property tax,water tax,professional tax, UGD tax –(Demand Notice) | 36 Wards |

மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை அரசு நிறுவனத்திடம் இருந்து நேரடியாக வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.10,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 1656 /2020/டி2

<table>
<tr><td>30.04.2020</td><td>

**4)** மயிலாடுதுறை நகராட்சி பொது நிதியின்கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 21.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எ ண்</th><th>வேலையின் விபரம்</th><th>ஒப்பந்த மதிப்பு ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள்</th><th>மதிப்பீட்டை விட குறைவு/ மதிப்பீட்டை விட அதிகம்</th><th>குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</th></tr>
<tr><td>1</td><td>2</td><td>3</td><td>4</td><td>5</td><td>6</td></tr>
<tr><td colspan="6">பொது நிதி 2019-20</td></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">வார்டு எண்.7 திம்மநாயக்கன் படித்துறை நுண்ணுயிரி மையத்திற்கு Belt Conveyor வாங்கி பொருத்தும் பணி.</td><td rowspan="2">4,30,000/-</td><td>திரு. G. உத்திராபதி, மயிலாடுதுறை.</td><td>ரூ. 379542.00/– (–) 0.0003% குறைவு</td><td rowspan="2">திரு. G. உத்திராபதி, மயிலாடுதுறை.</td></tr>
<tr><td>திரு. P. சிவகுமார், மயிலாடுதுறை.</td><td>ரூ.380424.00/– (+)0.232% அதிகம்</td></tr>
</table>

அலுவலககுறிப்பு: பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண். 1634/2018/இ1**

</td><td>

**தீர்மான எண்.758**

அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

</td></tr>
<tr><td>30.04.2020</td><td>

**5)** இந்நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள TN.51.T.7645 என்ற எண்ணுள்ள ஈப்பு வாகனத்தின் முன்பக்க கண்ணாடி தேய்ந்து இரவில் வாகனம் இயக்குவதற்கு சிரமமாக இருந்ததால், அவ்வாகனத்தின் ஒட்டுநர் திரு.K.கிருஷ்ணமூர்த்தி, புதியது வாங்கி பொருத்தியுள்ளார். இதற்கான செலவீனத் தொகை ரூ.5200/- (ரூபாய் ஐந்தாயிரத்து இருநூறு மட்டும்) ஆகும். இதனை நகராட்சி சட்டவிதி எண்.15ன்படி நகராட்சி ஒட்டுநர் திரு.K.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு குடிநீர் திட்ட நிதி 2020-21ன்கீழ் பணி மேற்கொண்டு, தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண். 1178/2020/இ1

</td><td>

**தீர்மான எண்.759**

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| **30.04.2020** | **6)** மயிலாடுதுறை நகராட்சி நகராட்சி அலுவலகம் பழைய கட்டிடத்தில் உள்ள அலுவலக Generator உரிய Starting Battery பழுதடைந்துவிட்டது. இதனால் திடீரென ஏற்படும் மின்தடையின் போது Generator-ஐ உடன் இயக்க முடியவில்லை. எனவே புதிய Battery (12V,100W) 2 எண்ணிக்கை வாங்குவதற்கு உத்தேச செலவீனத் தொகை ரூ.22,000/- (ரூபாய் இருபத்தி இரண்டாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சியின் பொது நிதி 2020-21 இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். **1647/2020/இ1** | **தீர்மான எண்.760**<br><br>**அனுமதிக்கப்பட்டது** |
| **30.04.2020** | **7)** மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று (Covid-19) பரவுவதை கட்டுப்படுத்தும் வகையில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செ.மு.ந.க.எண்.2656/அ2/2018, நாள்:30.03.2020ம் தேதிய செயல்முறை ஆணையில் மயிலாடுதுறை நகராட்சியில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்கு விற்பனை சந்தை மற்றும் கடைகளில் Social Distancing Maintain செய்வதற்காகவும், மேலும் Positive case ஏதும் வந்தால் வீட்டுக்கு வீடு Contaminate Protocol அமல் செய்வதற்காகவும் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக மஸ்துார்களை 30 பணியாளர்களை நியமனம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகர்நல அலுவலரின் அறிக்கையில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையில் தெரிவித்துள்ளபடி 30 மஸ்துார்களை மாவட்ட ஆட்சியரின் அளவுகோட்டின்படி ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.385/– வீதம் மூன்று மாதத்திற்கு நியமனம் செய்திடவதற்காக அதற்கான உத்தேச செலவினம் ரூ.1100000/– என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே 30 தினக்கூலி மஸ்துார்களை நியமனம் செய்வதற்கு அதற்கான உத்தேச செலவனம் ரூ.1100000/–த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன்கருதியும் கொரோனா வைரஸ் நோய் பரவுதை தடுத்திடும் பொருட்டு 30 தற்காலிக மஸ்துார்களை 01.04.2020 முதல் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நியமனம் செய்யப்பட்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ந.க.எண்.1302/2020/எச்1 | **தீர்மான எண்.761**<br><br>**அலுவலக குறிப்பினை ஏற்று கொள்ளப்பட்டது.** |

<table>
<tr>
<td>30.04.2020</td>
<td>8) மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று தடுக்க தற்போது கு.ந.ச 144 தடை உத்தரவு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்படியும் நகர்நல அலுவலரின் 31.03.2020ம்தேதிய அறிக்கையின்படியும் கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவாமல் தடுத்திடும் பொருட்டு அத்தியவாசிய பொருட்கள் வாங்க மக்கள் அதிகம் கூடுவதை தவிர்க்க இந்நகராட்சி 36 வார்டுகளிலும் மூன்று மண்டலமாக பிரிக்கப்பட்டு வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டும் ஒவ்வொரு மண்டலத்திருந்து பொதுமக்கள் வெளியில் வருவதற்கு அனுமதிச் சீட்டு மூன்று வண்ணங்களில் அச்சடித்து வழங்குவற்கு அதற்கான உத்தேச் செலவினம் ரூ20,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.அவசர அவசியம் கருதியும் போர்க்கால அடிப்படையில் செய்து முடிக்க வேண்டியுள்ளதாலும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ந.க.எண்.1302/2020/எச்1</td>
<td>தீர்மான எண்.762<br>அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>30.04.2020</td>
<td>9)மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்கும்பொருட்டு பொதுமக்கள் அதிகம் கூடுவதை தவிர்க்க 36 வார்களுக்கு மூன்று வண்ணங்களில் 30000 எண்ணிக்கையில் அனுமதி சீட்டு அச்சடித்து வழங்க 08.04.2020அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.<br><br>
<table>
<tr><td>வ.எண்</td><td>பெயர் மற்றும் முகவரி</td><td>விலை விகிதம்</td></tr>
<tr><td>1.</td><td>ஸ்ரீ அன்னைசேது பிரிண்டர்ஸ் பேப்பர் மார்ட்,<br>151, முத்து வக்கீல் சாலை,<br>மயிலாடுதுறை</td><td>30000 x 0.50 = 15000/-</td></tr>
<tr><td>2.</td><td>லலிதா பிரிண்டர்ஸ்,<br>காசுகடை தெரு,<br>மயிலாடுதுறை</td><td>30000 x 0.60 = 18000/-</td></tr>
<tr><td>3.</td><td>குமரன் பிரிண்டர்ஸ்,<br>எஸ்ஆர் காம்ளக்ஸ்,<br>விஜயா தியேட்டர் சாலை,<br>மயிலாடுதுறை</td><td>30000 x 0.70 = 21000/-</td></tr>
</table>
மேற்கண்டவாறு பெறப்பட்ட விலைப்புள்ளியில் வரிசை எண் 1ல் உள்ள அன்னை சேது பிரிண்டர்ஸ் மயிலாடுதுறை என்ற நிறுவனத்தில் பெறப்பட்ட விலைப்புள்ளி குறைாவாக உள்ளது. மன்றத்தில் முடிவுக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: 1.குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள மயிலடுதுறை ஸ்ரீ அன்னை சேது பிரிண்டர்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>2.அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் செயல்படுத்தும் பொருட்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ அன்னை சேது பிரிண்டர்ஸ் பேப்பர் மார்ட் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவுகள் வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ந.க.எண்.1302/2020/எச்1</td>
<td>தீர்மான எண்.763<br>அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 30.04.2020 | **10)** மயிலாடுதுறை நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் Covid-19) அதிதீவிரம் அடைந்து வரும் நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அறிவுரையின்படி கூடுதலாக தற்காப்பு சாதனங்கள் இருப்புகள் வைத்திட வேண்டும் என உத்தரவிடப்பட்டது. நகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு தினந்தோறும் முககவசம் வழங்கப்பட்டு வருவதால் முக கவசங்களின் இருப்புகள் போதிய அளவீட்டில் வைத்திருப்பதற்கு ஏதுவாக கூடுதலாக முக கவசங்கள் வாங்கிடும்படி துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் நகர்நல அலுவலர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள். மேற்படி முக கவசங்கள் வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.100000/– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் பணிகள் நடைபெற வேண்டியுள்ளதால் செய்து முடிக்க வேண்டி உள்ளதாலும் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ந.க.எண். 1302/2020/எச்1. | **தீர்மான எண்.764**<br>**அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டது.** |
| 30.04.2020 | **11)** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் (Covid-19) பரவாமல் தடுத்திருக்கும் பொருட்டு நகராட்சியில் தற்காப்பு சாதனங்களான மூன்று அடுக்கு முககவசங்கள் வழங்குவதற்காக 27.04.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. | **தீர்மான எண்.765**<br>**அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.** |

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | Reliant Global Green<br>856, Abirami Illam<br>11th Cross road<br>Coimbatore | 14.50+5%+0.72% =15.22 |
| 2 | Shine Traders<br>L-64/305(1) Police Quarters<br>Ganapathy - Coimbatore | 15.00+0.5%+0.75% =15.75 |
| 3 | Radiaat Textile Process<br>No. 241, Sengunthapuram west<br>Erode/ | 15.50+5%+0.77% =16.27 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வ.எண்.1 – Reliant Global Green, Coimbatore நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Reliant Global Green, Coimbatore நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

ந.க.எண். 1302/2020/எச்1

| | | |
|---|---|---|
| 30.04.2020 | **12) CVID-19** சுகாதார பிரிவின் பயன்பாட்டிற்கு தேவையான BHEL MISTER DBFC -2000 இயக்குவதற்கு 15.00 KVA Diesal Generator தேவையாக உள்ளது. இந்த எந்திரத்தின் பயன்பாடு முதற்கட்டமாக ஒருமாதத்திற்கு என கணக்கிடப்பட்டு அந்த கால அலகில் Generator வாடகைக்கு வாங்கி பயன்படுத்தி கொள்ள ஆகும் உத்தேச செலவீனம் ரூ.60,000/– (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) இதனை இந்நகராட்சியின் பொது நிதி 2020–2021 இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.1666/2020/இ1 | தீர்மான எண்.766<br>அனுமதிக்கப்பட்டது. |
| 30.04.2020 | 13) இந்நகராட்சியில் 2020–2021 ஆம் நிதியாண்டிற்கு அலுவலக உபயோகத்திற்கு கீழ்கண்டுள்ளவாறு தேவையான கணினி பொருட்கள் மற்றும் அலுவலக பொருட்கள் தேவைப்படுகிறது. | தீர்மான எண்.767<br>அனுமதிக்கப்பட்டது. |

| வ.எண் | பொருட்கள் | கூடுதலாக தேவைப்படும் பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | HP Laser Jet 05A tonner | 30nos |
| 2. | HP Laser Jet 28A (28X) tonner | 15nos |
| 3. | HP Laser Jet m203 dn-30A tonner | 15nos |
| 4. | TVS 132 coloum printer catridge | 15nos |
| 5. | TVS 80 coloum printer catridge | 15nos |
| 6. | Key board | 5nos |
| 7. | Mouse | 5nos |
| 8. | A4 GSM paper | 200nos |
| 9. | File pad | 200nos |
| 10. | Writting pad | 5nos |

மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை அரசு நிறுவனத்திடம் இருந்து நேரடியாக வாங்கிக்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.20,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 1668 /2020/டி2

| | | |
|---|---|---|
| 30.04.2020 | **14)** இந்நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள TN.82.A.0658 ஆணையர் ஈப்பு வாகனத்தின் பழுதுகள் ஏற்பட்டு இயக்குவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. | தீர்மான எண்.768<br>அனுமதிக்கப்பட்டது. |

| வ.எண் | பழுதுகள் விபரம் |
|---|---|
| 1 | பிரண்டு சஸ்பென்சர் இரண்டு பக்கம் பிரித்து புஸ்கிட், ஸ்பிரிங் -2, ஷேக்அப்சர்-2, பால் ஜாய்ண்டு கிட், பிரேக்பெடு, வீல்பேரிங்-4,ஆயில்சீல் -2, லாக் வாசர், லாக்நெட் புதியது மாற்ற வேண்டும். |
| 2 | பேக்வீல் லயனிங் மாற்ற வேண்டும். |
| 3 | பேக்ஸ்பிரிங் புஸ் புதியது மாற்ற வேண்டும். |
| 4 | ஜாய்ண்டு கிராஸ் புதியது மாற்ற வேண்டும். |
| 5 | ஸ்டேரிங் பால் ஜாய்ண்டு எண்டு செட் மாற்ற வேண்டும். |
| 6 | ரேடியட்டர் சர்வீஸ் செய்ய வேண்டும். |
| 7 | ஏசி பிரித்து சர்வீஸ் செய்ய வேண்டும். |

எனவே மேற்கண்ட பழுதுகளை சீர்செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.41,000/- (ரூபாய் நாற்பத்தி ஓராயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சியின்குடிநீர் திட்ட நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1178/2020/இ1

| | | |
|---|---|---|
| 30.04.2020 | **15)** மயிலாடுதுறை நகராட்சி - COVID-19- நோயாளி கண்டறியப்பட்ட இடங்களை சுற்றி சாலையின் குறுக்கே தேவைப்படும் இடங்களில் சௌவுக்கு மரம் மற்றும் G.I Sheet பயன்படுத்தி தடுப்புசுவர் அமைப்பதற்கான செலவீனத் தொகை ரூ.60,000/- (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) ஆகும். இப்பணி மிகவும் அவசர அவசிய பணி என்பதால் நகராட்சி சட்டவிதி எண்.15ன்படி இந்நகராட்சி பொது நிதி 2020-21ன்கீழ் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1532/2020/இ1 | தீர்மான எண்.769<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 30.04.2020 | 16) மயிலாடுதுறை நகராட்சி - COVID-19- தொற்றுநோய் பரவாமல் தடுத்திடும் பொருட்டு முன்னெச்சரிக்கை எடுப்பது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி தற்காலிக காய்கறி கடை, நகராட்சி அலுவலகம், கட்டுப்பாட்டு மண்டலம் ஆகிய இடங்களுக்கு வரும் பொதுமக்கள் கைகளை கழுவுவதற்கான வசதிகள் (Hand wash basin, flex fixing with awareness) ஏற்படுத்தி தருவதற்கான செலவீனத் தொகை ரூ.60,000/- (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) ஆகும். இப்பணி மிகவும் அவசர அவசிய பணி என்பதால் நகராட்சி சட்டவிதி எண்.15ன்படி இந்நகராட்சி பொது நிதி 2020-21ன்கீழ் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1532/2020/இ1 | தீர்மான எண்.770<br>அனுமதிக்கப்பட்டது. |
| 30.04.2020 | 17) மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.24, சத்திய சாய் நகர் செல்லும் சாலை சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின்கீழ் வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணி துவங்கப்பட்டுள்ளது. அச்சாலையின் ஒரு பகுதி மட்டும் முழுமையாக மேம்பாடு செய்ய மதிப்பீட்டில் வழிவகை இல்லாததால், மேற்கண்ட சாலையினை முழுமையாக மேம்பாடு செய்ய பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்துள்ளன. பழுதடைந்த மேற்கண்ட சாலையினை முழுமையாக மேம்பாடு செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.350000/– (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 722/2020/இ1 | தீர்மான எண்.771<br>அனுமதிக்கப்பட்டது. |
| 30.04.2020 | 18) மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணி – PS.4 முதல் PS.8 வரை செல்லும் Backbone sewer-IIல் தற்காலிக கழிவுநிர் உந்து குழாய் (PVC) பதிக்க திட்டமிடப்பட்டு அதன்படி முதல் கட்டமாக 624.00 மீட்டர் பதிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக தரங்கம்பாடி சாலை ஜெனிபர் கடை வரை பதிக்க வேண்யடியுள்ளது. மேலும் 20 HP மின்மோட்டார் ஒன்று பழுது நீக்கி தயார் செய்து இயக்க வேண்டியுள்ளதால் இப்பணிகள் மேற்கொள்ள தேவையான மதிப்பீடு தொகை ரூ.4.00 லட்சம் (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் பாதாள சாக்கடை திட்ட நிதி (அ) பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1778/2020/இ1 | தீர்மான எண்.772<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 30.04.2020 | 19) மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பழுதடைந்த ஆள்நுழைவு குழாய்களின் மூடிகளை சரி செய்திட ஏதுவாகவும் பொது மக்களின் நலன் கருதியும் ஆள்நுழைவு குழாய் மூடிகள் 300 எண்ணிக்கை Man Hole cover with Frame வாங்கி பயன்படுத்திட தேவையான மதிப்பீடு தொகை ரூ.8.25 லட்சம் (ரூபாய் எட்டு லட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 1777/2020/இ1 | தீர்மான எண்.773<br>அனுமதிக்கப்பட்டது. |
| 30.04.2020 | 20) மயிலாடுதுறை நகராட்சி – குடிநீர் விநியோக பணி – வார்டு எண்.5 அண்ணாமலை நகர் பகுதி, கிள்ளை குளம் கரையோரம் உள்ள குடிநீர் பகிர்மான குழாய் பழுதடைந்து அதன் வழியே பிறநீர் புகுந்து சுகாதாரமற்ற நிலையை ஏற்படுத்துகின்றது. எனவே, இப்பகுதியல் உள்ள சுமார் 180.00 மீட்டர் நீளமுள்ள பகுதியில் புதிய குடிநீர் குழாய் பதித்து சரிசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான உத்தேச செலவீனம் ரூ.60,000/- (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) ஆகும். மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி எண்.15ன் கீழ் இந்நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 1786/2020/இ1 | தீர்மான எண்.774<br>அனுமதிக்கப்பட்டது. |